**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், அருப்புக்கோட்டை.**

முன்னிலை:– **திருமதி. S.ஆனந்தவல்லி,B.A.,B.L.,**

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி, அருப்புக்கோட்டை.

2026 ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 22 ம் நாள் புதன்கிழமை

அசல் வழக்கு எண்.283/2015

*****

1. சோ.சீனிவாசன்

2.வ.சுந்தரராஜ்

(வாதிகள் தங்களுக்காகவும், பந்தல்குடி

கிராமம், லிங்காபுரம் தெருவில் வசிக்கும்

24 மனை தெலுங்கு செட்டியார்கள் ஜாதியைச்

சேர்ந்த விவசாய மக்களின் பிரதிநிதிகள் ஸ்தானத்திலும்)

...... வாதிகள்

/எதிரிடை/

1. ராமசாமி
2. ரெங்கசாமி
3. பந்தல்குடி ஊராட்சி மன்றம்,
அதன் தலைவர் மூலம்
4. தமிழ்நாடு மின்சார வாரியம், பந்தல்குடி
இளநிலை பொறியாளர் மூலம்
5. பார்வதி
6. சுந்தரராஜ்
7. கார்த்திகைசெல்வி
8. அய்யம்மாள்
9. பொம்முத்தாய்
10.சுப்புராஜ்
11.சுப்புலட்சுமி
12.ராமலட்சுமி
13.மாரியம்மாள்
14.சாந்தி
15.நீலகண்டன்
16.ரத்தினம்மாள்
17.பால்சாமி
18.அன்பரசு

19.தனலட்சுமி
20.மாரியம்மாள்
21.ஜெயராம்
22.ராமசாமி
23.எர்ரம்மாள்
24.அன்னம்
25.சின்னரக்கம்மாள்
26.பிரியா என்ற முத்துலட்சுமி பிரியா
27.சின்னரக்கம்மாள்
28.ஏர்ரம்மாள்
29.பரமசிவன்
30.நாகஜோதி
31.பாண்டியராஜ்
32.ஜெயக்கொடி
33.சின்னத்தாய்
34.மீனாட்சி
35.சின்னரக்கம்மாள்
36.முருகேஸ்வரி
37.லட்சுமி
38.ராமலட்சுமி
39.மகாலட்சுமி
40.பூபதிராஜ்
41.பரமேஸ்வரி
42.சிவக்குமார்
43.சுப்புலட்சுமி
44.பார்வதி
45.ராமராஜ்
46.லட்சுமணன்
47.சுந்தரராஜ்
48.கிருஷ்ணம்மாள்
49.பத்மாவதி
50.சந்தனமாரி
51.முத்துமாரி
52.போலியம்மாள்
53.சத்தியகலா
54.கரியக்கம்மாள்
55.சுப்பிரமணியன்
56.பஞ்சவர்ணம்
57.சிவக்குமார்

58.செல்வராஜ்
59.மாரிமுத்து
60. கன்னிமாரியம்மாள்
61.சந்திரா
62.லட்சுமி
63.பஞ்சவர்ணம்
64.பரமேஸ்வரி
65.பாலகிருஷ்ணன்
66.பொன்னுத்தாய்
67.தனலட்சுமி
68.அமுதா
69.ராஜசேகர்
70.நீலாவதி
71.கருப்பசாமி
72.தியாகராஜன்
73.பார்வதி
74.சரஸ்வதி
75.கிருஷ்ணன்
76.மாரியப்பன்
77.கந்தசாமி
78.கோவிந்தசாமி
79.முத்துமாரி
80.மாரீஸ்வரி
81.சுப்புத்தாய்
82.சித்ராதேவி
83.சுப்புலட்சுமி
84.பழனிச்செல்வி
85.முத்துவேலம்மாள்
86.செல்வி
87.பவுன்ராஜ்
88.ராமகிருஷணன்
89.தனசெல்வி
90.சுப்புலட்சுமி
91.சுப்புலட்சுமி
92.அமிர்தராஜ்
93.சுப்புலட்சுமி
94.ராமச்சந்திரன்
95.கஸ்தூரி
96.மாரிமுத்து

97.சுமதி
98.சங்கர்கணேஷ்
99.முருகன்
100.பரமேஸ்வரி
101.கந்தவேல்
102.பாண்டியம்மாள்
103.லிங்கம்மாள்
104.லிங்கேஸ்வரன்
105.மாரிச்சாமி
106.சதீஷ்குமார்
107.கிருஷ்ணசாமி
108.விஜயலட்சுமி
109.ஸ்ரீதேவி
110.சுப்புலட்சுமி
111.மகேந்திரன்
112.கிருஷ்ணவேணி
113.சுந்தரராஜ்
114.ராமலட்சுமி
115.வசந்தா
116.நாகஜோதி
117.ஜெயசித்ரா
118.மாரிமுத்து
119.ராஜேஸ்வரி
120.தமிழ்செல்வி
121.முருகன்
122.நாகராஜன்
123.பார்வதி
124.பாண்டியம்மாள்
125.புவனேஸ்வரி
126.சண்முகலட்சுமி
127.விமலாதேவி
128.ரேனுகாதேவி
129.பொன்னுத்தாய்
130.மகாலிங்கம்
131.ராமுத்தாய்
132.செல்வராஜ்
133.ஆறுமுகம்
134.பரமேஸ்வரி
135.பஞ்சவர்ணம்

136.ஜெயசங்கர்
137.சிங்கராசு
138.முத்துவேல்
139.மூக்கம்மாள்
140.நாகராஜ்
141.நாகஜோதி
142.கிருஷ்ணசாமி
143.கலாவதி
144.நாகராஜ்
145.மாரியம்மாள்
146.எர்ரம்மாள்
147.பழனியம்மாள்
148.ரேவதி
149.சரஸ்வதி பாப்பா
150.விஜயலட்சுமி
151.பரமசிவம்
152.சங்கரேஸ்வரி
153.நாகராஜ்
154.தங்கராஜ்
155.ராமலட்சுமி
156.மகாலிங்கம்
157.பாலமுருகன்
158.அழகம்மாள்
159.அழகர்க்காள்
160.பார்வதி
161.ராமச்சந்திரன்
162.முத்துக்குமார்
163.ராஜேஸ்வரி
164.முத்துராஜ்
165.பொன்னுத்தாய்
166.கோமதிவிஜி
167.பாலு
168.முத்துமாரி
169.தேவிகா
170.வெங்கடேஸ்வரி
171.கோவிந்தராசு
172.ஜெயகார்த்திகா
173.மாரியம்மாள்
174.முத்துராசு

175.கோசலை
176.செல்லத்தாய்
177.கந்தசாமி
178.பார்வதி
179.இராஜலட்சுமி
180.இளையராணி
181.சின்னத்தாய்
182.சின்னரக்காள்
183.கந்தசாமி
184.மகாலட்சுமி
185.நாகராஜன்
186.சுப்புத்தாய்
187.ராமலட்சுமி
188.நடராஜன்
189.சுப்புலட்சுமி
190.சுந்தரராஜ்
191.சிவசக்தி
192.எர்ரம்மாள்
193.பாலசுப்பிரமணியன்
194.ராமலட்சுமி
195.எர்ரம்மாள்
196.சங்கரேஸ்வரி
197.சிவக்குமார்
198.சுமதி
199.சரஸ்வதி
200.மகாலிங்கம்
201.ராமலட்சுமி
202.அங்காளஈஸ்வரி
203.அழகம்மாள்
204.ஜெயராம்
205.அழகம்மாள்
206.மலர்
207.சுப்புத்தாய்
208.சண்முகத்தாய்
209.சுப்பம்மாள்
210.சீதாலட்சுமி
211.காளிதாஸ்
212.பிரியங்கா
213.கோமதி

214.அழகம்மாள்
215.மாரியம்மாள்
216.முத்துலட்சுமி
217.முத்துராஜ்
218.கார்த்திகைசெல்வி
219.சிவக்குமார்
220.மாரியம்மாள்
221.சுப்புராஜ்
222.அழகர்சாமி
223.மகேஸ்வரி
224.அருணாச்சலம்மாள்
225.ராமராஜ்
226.கந்தன்
227.மகாலிங்கம்
228.காவேரியம்மாள்
229.முத்துமாரி
230.ரங்கசாமி
231.நிர்மலா
232.முத்துலட்சுமி
233.நாகவள்ளி
234.லட்சுமி
235.மாரியம்மாள்
236.ஆவடைத்தாய்
237.சித்ரா
238.தாயம்மாள்
239.பத்மினி
240.முருகன்
241.முத்துமாரி
242.அன்னலட்சுமி
243.மாரியப்பன்
244.ருக்குமணி
245.ஆண்டாளம்மாள்
246.ராஜம்மாள்
247.சுந்தரம்மாள்
248.தேவிகா
249.வீரநாகு
250.அமுதா
251.சுப்பஞ்செட்டியார்
252.கந்தசாமி

253.சிவக்குமார்
254.எர்ரம்மாள்
255.சீதாலட்சுமி
256.ராஜலட்சுமி
257.ஜெயலட்சுமி
258.எர்ரம்மாள்
259.வள்ளிபொம்பி
260.சுதாகர்
261.திருமலையம்மாள்
262.வேலுச்சாமி
263.முருகலட்சுமி
264.சோணையா
265.சுந்தரம்மாள்
266.சுந்தரராஜ்
267.சின்னம்மாள்
268.விஜயலட்சுமி
269.லட்சுமணன். ...... பிரதிவாதிகள்

(1, 2 பிரதிவாதிகள் தங்களுக்காவும்,
பந்தல்குடி கிராமம், லிங்காபுரம் தெருவில்
வசிக்கும் 24 மனை பிரதிநிதிகள் ஸ்தானத்திலும்)

(5 முதல் 269 ஆட்சேபணைதாரர்களை 5 முதல் 269 பிரதிவாதிகளாக சேர்க்க ஐ.ஏ.எண்.2/2021–ல் 29.09.2021ம் தேதி ஏற்பட்ட உத்தரவுப்படி சேர்க்கப்பட்டுள்ளது).

(பிராது ஐ.ஏ.எண்.3/2021–ல் 24.02.2022ம் தேதி ஏற்பட்ட உத்தரவுப்படி திருத்தப்பட்டுள்ளது).

இவ்வழக்கானது கடந்த 18.11.2015ம் தேதி கோப்பிற்கு எடுக்கப்பட்டு கடந்த 07.04.2026ம் தேதியன்று இந்நீதிமன்றம் முன்பு இறுதிவிசாரணைக்கு வந்தபோது வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.N.சோலைராஜ் அவர்கள் முன்னிலையாகியும், 1, 2 மற்றும் 5 முதல் 269 பிரதிவாதிகள் தரப்பில் T.ராஜாதேசிங் அவர்கள் முன்னிலையாகியும், 3ம் பிரதிவாதி தோன்றாதரப்பினராக ஆகியுள்ள நிலையிலும், 4ம்பிரதிவாதி தரப்பிதில் அரசு வழக்கறிஞர் அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்களை கேட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்த இவ்வழக்கில் இந்நீதிமன்றம் வழங்கிடும் .....

**<u>தீர்ப்புரை</u>**

தாவாச் சொத்தை வாதிகள் களமாக பயன்படுத்துவதை 1, 2, 5 முதல் 269 பிரதிவாதிகளோ மற்றும் அவர்களை சார்ந்தவர்களோ எந்தவிதத்திலும் இடைஞ்சல் செய்யவோ, வேறு கட்டுமானங்கள் கட்ட கூடாது என்று 1, 2 பிரதிவாதிகள் மீது நிரந்தர உறுத்துகட்டளை பரிகாரம் வழங்கியும், தாவா சொத்தில் பிரதிவாதிகள் வழக்கிற்கு பிற்பாடு அக்கிரமமாக கட்டியிருக்கும் கட்டுமானங்களை கோர்ட்டார் அவர்கள் குறப்பிடும் காலத்திற்குள் அப்புறப்படுத்தச் சொல்லியும், தவறும் பட்சத்தில் நீதிமன்றம் மூலம் அப்புறப்படுத்த தோதாக செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும், தாவா சொத்தில் கட்டுமானங்கள் கட்ட 1, 2 பிரதிவாதிகளுக்கு அனுமதி வழங்கக்கூடாது என்று 3ம்பிரதிவாதி மீது நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும், தாவா சொத்தில் கட்டப்போகும் கட்டுமானப் பணிகளுக்கு தற்காலிக மின்இணைப்போ, நிரந்தர மின்இணைப்போ வழங்கக்கூடாது என்று 4ம்பிரதிவாதி மீது நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும், இவ்வழக்கின் செலவு தொகையை வாதிகளுக்கு, பிரதிவாதிகளை கொடுக்கச் சொல்லியும் வாதிகளால் இவ்வழக்கு தாக்கல்.

2. **<u>வாதிகள் தாக்கல் செய்த சீர்திருத்த வழக்குரையின் சுருக்கம்</u> :–**

(1) தாவாச் சொத்து என்பது பந்தல்குடி கிராமம், லிங்காபுரம் பகுதியில் வசிக்கும் 24மனை தெலுங்கு செட்டியார்கள் ஜாதி விவசாய மக்களுக்கு களமாக பயன்படுத்த வேண்டுமென்ற எண்ணத்தில் மேற்படி ஜாதி முக்கியதஸ்தர்களாக இருந்த கொப்புலு செட்டியார், குருசாமி செட்டியார், முத்தால் செட்டியார், மலையாண்டி செட்டியார் மற்றும் சுப்பஞ் செட்டியார் ஆகிய ஐந்து பேர்கள் பெயரில் கந்தன் செட்டியார் வகையறாவிடமிருந்து 06.7.1949ம் தேதியிட்ட பதிவு செய்த கிரையப்பத்திரம் மூலம் கிரையம் வாங்கப்பட்ட சொத்தாகும்.

(2) தாவாச் சொத்து ABCD என்று காண்பிக்கப்பட்டுள்ளது. மேலே சொன்ன 06.07.1949ம் தேதியிட்ட கிரையப்பத்திரத்தில் தவறுதலாக கூடுதலான அளவுகள்

போட்டு வாங்கப்பட்டுள்ளது. தாவா சொத்து பூமியில் கிழமேல் 102 அடியும், தென்வடல் 73 அடியும் தான் இருக்கின்றது. கிழமேல் 102 அடிக்கு கிழக்கே சுப்பம்மாள் என்பவர் 06.07.1949 ம் தேதியிட்ட கிரையப்பத்திரத்திற்கு முன்பே 29.05.1948 ம் தேதி கிழமேல் 25 1/2 அடி. தென்வடல் 40 1/2 அடி இடத்தை கிரையம் பெற்றுள்ளார். அதற்கும் கிழக்கே அழகராசாரி இடம் இருப்பதில் அதிலும் 8 அடி இடத்தையும் சேர்த்து 06.07.1949 ம் தேதியிட்ட கிரையப்பத்திரத்தில் சேரத்துவிட்டனர். அழகராசாரி இடத்தை தற்போது வசந்தா என்பவர் கிரையம் பெற்று அனுபவித்து வருகிறார். சுப்பம்மாள் கிரையம் பெற்ற 29.05.1948 ம் தேதியிட்ட கிரையப்பத்திரத்தில் மேற்குமாலில் உள்ள மூக்காண்டி செட்டியார் கொல்லை என்பதைத்தான் மூக்காண்டி வகையறாவினர் 06.07.1949 ம் தேதியிட்ட பத்திரம் மூலம் உறவின்முறைக்கு கிரையம் கொடுத்துள்ளனர்.

(3) மேலே கண்டவிதம் பந்தல்குடி கிராம லிங்காபுரம் 24 மனை தெலுங்கு செட்டியார்கள் சமூகத்திற்காக வாங்கப்பட்ட தாவாச் சொத்தை கிரைய காலம் முதல் வாதிகள் ஜாதியினர் தங்கள் விவசாய விளைபொருட்களை கொண்டு வந்து போட்டு அதை களமாக நெடுகிலும் பயன்படுத்தி வருகிறார்கள். வாதிகள் ஜாதியைச் சேர்ந்த விவசாயிகளுக்கு வேறு களமும் கிராமத்தில் இல்லை. தாவா சொத்துக்கு மேற்கே தூத்துக்குடி நெடுஞ்சாலை இருக்கின்றது. மேற்படி நெடுஞ்சாலையை பொதுமக்கள் சட்ட விரோதமாக களமாக பயன்படுத்தினால் போக்குவரத்துக்கு இடைஞ்சலும், விபத்துக்களும் ஏற்படுவதுடன் காவல்துறையினரால் வழக்கு பதிவு செய்யவும் வாய்ப்பு ஏற்பட்டுவிடும். தாவாச் சொத்தை களமாக பயன்படுத்தவே கிரையம் வாங்கப்பட்டதால் அதை வேறு உபயோகத்திற்கு பயன்படுத்த முடியாது. வேறு உபயோகத்திற்கு பயன்படுத்தினால் வாதிகள் தங்கள் விவசாய விளைபொருட்களை தானியமாக மாற்றி எடுக்க களம் இல்லாமல் பெருத்த கஷ்டம் நஷ்டம் அடையக்கூடும். மேலும் 06.07.1949 ம் தேதியிட்ட கிரையப்பத்திரத்திலேயே கிரையம் கொடுத்த நபர்களுக்கு

அவரது வாரிசுகளுக்கும் தாவாச் சொத்தை களமாக பயன்படுத்த உரிமையை தக்க வைத்துக்கொள்கிறார்கள்.

(4) 1, 2 பிரதிவாதிகள் தாங்கள் பந்தல்குடி கிராமம், லிங்காபுரம் தெருவில் வசிக்கும் 24 மனை தெலுங்கு செட்டியார்களின் நிர்வாகிகள் என்று கூறிக்கொண்டு பலரிடம் கெடுபிடியாக பணத்தை வசூல்செய்து சுயநலத்திற்காக தாவாச் சொத்தில் திருமண மண்டபம் கட்டப்போவதாக கடந்த 08.11.2015ம் தேதி வாதிகள் தடுத்தும் சட்ட விரோதமாக குழிகள் தோண்டிவிட்டனர். தாவாச் சொத்து எந்த நோக்கத்திற்காக கிரையம் வாங்கப்பட்டதோ, அந்த நோக்கத்திற்கு பயன்படுத்த முடியாமல் போய்விடும். தாவாச் சொத்துக்கு வடக்கே ஓடை இருப்பதில் அந்த ஓடையை ஒட்டி தெற்கே உள்ள பாதையையும் வேலிபோட்டு அடைத்துவிட்டார்கள்.

(5) தாவாச் சொத்தில் கட்டிடம் கட்ட அனுமதி வழங்கக்கூடாது என்று 3ம் பிரவாதியையும் தற்காலிகமாகவோ, நிரந்தரமாகவோ மின்இணைப்பு வழங்கக் கூடாது என்று 4ம் பிரதிவாதியும் இவ்வழக்கில் சேர்த்துள்ளோம்.

(6) இவ்வழக்கில் 5 முதல் 269 பிரதிவாதிகள் ஆட்சேபணை தாக்கல் செய்திருந்தார்கள். அந்த ஆட்சேபணைதாரரர்கள் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை CMP(MD)No.2558/2016– ல் ஏற்பட்ட உத்தரவுப்படி பிரதிவாதிகளாக சேர்க்கப்பட்டுள்ளார்கள். (பிராது ஐ.ஏ.எண்.3/2021–ல் 24.02.2024ம் தேதி ஏற்பட்ட உத்தரவுப்படி திருத்தப்பட்டது). தாவா சொத்தில் பிரதிவாதிகள் வழக்கிற்கு பிற்பாடு அவசர அவசரமாக ஊராட்சிமன்ற அனுமதி இல்லாமலும் வரைபட அங்கீகாரம் இல்லாமலும் திருமண மண்டபம் கட்ட மாவட்ட ஆட்சியரின் அனுமதி இல்லாமல் கட்டிடம் கட்டிவிட்டார்கள். எனவே அந்த கட்டிடத்தை இடித்து அப்புறப்படுத்த தோதாக செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் கேட்டும் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

(பிராது ஐ.ஏ.எண்.9/2026–ல் 25.02.2026ம் தேதி ஏற்பட்ட உத்தரவுப்படி திருத்தப்பட்டது).

3. **<u>கடந்த 21.03.2016ம் தேதி 4ம்பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிர்வழக்குரையின் சுருக்கம்</u>**:–

தபசில் சொத்தில் கட்டிடம் கட்டும் பணிக்காக தலைவர் 24 மனை செட்டியார் உறவின்முறையால் இந்தப் பிரதிவாதியிடம் தற்காலிக மின் இணைப்பு கோரி விண்ணப்பமும் அதனுடன் தீர்வை ரசீதும் தலைவர் பெயரில் மனுதாரர் தாக்கல் செய்திருந்தார். வாதிகள் மின் இணைப்பு கொடுக்கக் கூடாதென ஆட்சேபணை செய்தார்கள். பின்பு இருதரப்பினரும் தாவா இடம் சம்மந்தமான வருவாய்துறை ஆவணங்கள், இதர ஆவணங்கள் சமர்ப்பிக்க கோரி கடிதம் அனுப்பியும், வாதிகள் குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் தாவா இடம் சம்பந்தமாக எவ்வித ஆவணங்களும் சமர்ப்பிக்கவில்லை. ஆகவே இந்தப் பிரதிவாதி தாவா சொத்துக்கு தற்காலிக மின் இணைப்பு கொடுப்பது சம்பந்தமாக மின்வாரிய அரசு வழக்கறிஞரிடம் வழக்கறிஞரிடம் சட்டக்கருத்துரை பெற்று 19.11.2015–ல் மின் இணைப்பு வழங்கப்பட்டுவிட்டது. இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பே மின்இணைப்பு வழங்கப்பட்டுவிட்டது. எனவே தாவா வழக்கு 4ம்பிரதிவாதியைப் பொறுத்து in fructuous வழக்காகும். எனவே, வாதிகளின் வழக்கை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டியது.

4. **<u>கடந்த 10.08.2016ம் தேதிம 1, 2 பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிர்வழக்குரையின் சுருக்கம்</u>**:–

(1) தாவாச் சொத்து என்பது அருப்புக்கோட்டை தாலுகா, டி.கொப்புச்சித்தம்பட்டி குரூப், லிங்காபுரம் கிராமத்தில் உள்ளது. பிராது சொத்து விபரத்தில் பந்தல்குடி கிராமத்தில் தாவா சொத்து உள்ளதாக காட்டியிருப்பது வாதிகளின் மோசடி எண்ணத்தை காட்டுகின்றது. தாவாச் சொத்திற்கு வாதிகள்

அளித்திருக்கும் நான்குமால்களும், அடி அளவுகளும் மோசடியாக அளிக்கப்பட்டுள்ளன. தாவாச் சொத்திற்கு வடக்கே பாதை அமைப்பு ஏதும் கிடையாது. தாவாச் சொத்திற்கு வடக்கே சித்தான் ஓடை மட்டும் உள்ளது. தாவாச் சொத்திற்கு கிழக்கே அழகர் ஆசாரி வகையறா கொல்லையும், முத்தாள்செட்டியார் கொல்லையும் உள்ளது. தாவாச் சொத்திற்கு தெற்கே தற்பொழுது டி.ஏ,எஸ். அழகர்சாமி காலியிடம் உள்ளது. தாவாச் சொத்தானது கிழமேல் 45 கெஜத்திற்கு 135 அடியும், தென்வடல் 30 கெஜத்திற்கு 90 அடியும் அளவு கொண்டது. இதில் கிழக்கு பகுதியை அபகரிக்க வேண்டும் என்று வாதிகளும், வாதிகளின் உறவினர்களும் திட்டமிட்டு விவசாயிகளின் பிரதிநிதி என்ற முகமூடியை அணிந்து கொண்டு இந்த புரட்டு வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள்.

(2) லிங்காரபுரம் 24 மனை தெலுங்கு செட்டியார்கள் உறவின்முறையில் சுமார் 250 தலைக்கட்டுகள் உள்ளார்கள். தாவாச் சொத்தினை ஆதியில் களமாக உபயோகிக்க வேண்டி 06.07.1949ம் தேதியிட்ட கிரையப்பத்திரத்தின் மூலம் உறவின்முறையினர் கிரையம் வாங்கியுள்ளார்கள். கடந்த 20 ஆண்டுகளுக்கு மேலாக தாவாச் சொத்தை சுற்றி குடியிருப்பு வீடுகள் ஏற்பட்டிருக்கின்றது. பொதுமக்களும் மாசுக்கேடு ஏற்படுத்தி வந்தபடியால் தாவாச் சொத்தை களமாக உபயோகிப்பதை பிரதிவாதிகள் உறவின்முறையினர் நிறுத்திக்கொண்டார்கள். விவசாய நிலங்களின் விஸ்தீரணம் குறைந்துவிட்டதாலும், உழவு மாடுகள் இல்லாததாலும் கடந்த 20 ஆண்டு காலமாக தாவாச் சொத்தை களமாக பயன்படுத்தவில்லை. பிரதிவாதிகள் உறவின்முறையை சேர்ந்தவர்கள் அவரவர் நிலங்களில் சொந்தமாக சிறு களங்கள் அமைத்து டிராக்டரை வைத்து நவதானியங்களை பதரிலிருந்து பிரித்து வருகின்றார்கள்.

(3) கடந்த 20 ஆண்டுகளுக்கு மேலாக தாவாச் சொத்து காலியிடமாக இருந்து வருவதில் அதில் பிரதிவாதிகள் உறவின்முறையினர் திருமணமண்டபம் கட்ட கடந்த 2010ம் ஆண்டு தீர்மானித்து முடிவு செய்து உறவின்முறை தலைக்கட்டுகளிடம் தலா

ரூ1000.00 வீதம் தலைக்கட்டு வரி வசூல் செய்துள்ளார்கள். மேலும் இதுகுறித்து கடந்த 29.05.2014 ம் தேதியில் தீர்மானம் நிறைவேற்றி கடந்த ஒருவருட காலமாக கட்டிட வேலையை செய்து வருகின்றார்கள். பிராதிற்கு முன்பே தாவாச் சொத்தில் ஆழ்துளை கிணறு அமைக்கப்பட்டுள்ளது. தாவாச் சொத்தில் கட்டுமான பொருட்கள் வைப்பதற்காக பெரிய ஆஸ்பெஸ்டால் கூரை வேய்ந்த கட்டிட அறை கட்டப்பட்டுள்ளது. அதற்கு மின்இணைப்பும் பெறப்பட்டுள்ளது. மேலும் திருமண மண்டபத்திற்காக வேண்டி 10 அடி ஆழத்திற்கு மேல் குழிகள் தோண்டி அதில் கான்கிரிட் பில்லர்கள் அமைத்து திருமண மண்டபம் கட்டப்பட்டுள்ளது.

(4) பிரதிவாதிகள் உறவின்முறைக்கு பாத்தியப்பட்ட இடத்தில் உறவின்முறை உறுப்பினர்களின் மெஜாரிட்டி தீர்மானப்படி திருமணமண்டபம் கட்டியிருக்கின்றோம். வாதிகளும் அந்த திருமணமண்டபம் கட்டுவதற்கு சம்மதித்து தீர்மானத்தில் கையெழுத்து செய்து, நன்கொடையும் அளித்துள்ளார்கள். தற்பொழுது வாதிகளின் உறவினர்களுக்காக வேண்டி சுயநலம் கருதி வாதிகள் இந்த வழக்கை தாக்கல் செய்திருக்கின்றார்கள். ஏற்கனவே வசந்தா என்பவர் தாவாச் சொத்தில் உரிமை கோரி சமூகம் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.263/2015 என்ற வழக்கினை தாக்கல் செய்திருக்கின்றார். அதில் நீதிமன்ற ஆணையர் தாவாச் சொத்தை பார்வையிட்டு அறிக்கையும், வரைபடமும் தாக்கல் செய்திருக்கின்றார். கந்தசாமி செட்டியார் என்பவரும், சுப்புலட்சுமி அம்மாள் என்பவரும் தாவாச் சொத்தில் உரிமை கோரி சமூகம் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.264/2015 என்ற வழக்கினை தாக்கல் செய்திருக்கின்றார்கள்.

(5) சி. அ.ராமசாமி என்பவரும் மற்றும் சி.அ.வேலுச்சாமி என்பவர்களும் தாவாச் சொத்தில் உரிமை கோர சமூகம் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.254/2015 என்ற வழக்கினை தாக்கல் செய்திருக்கின்றார்கள். அந்த வழக்குகளில் உறுத்துக்கட்டளை பெற முடியவில்லை என்ற ஆத்திரத்தில் மேற்படி வாதிகள் ஒன்றுகூடி சதி

ஆலோசனை செய்து உறவினர்களான இந்த வழக்கு வாதிகளை கைப்பாவையாக வைத்துக்கொண்டு இந்த புரட்டு வழக்கை தாக்கல் செய்திருக்கின்றார்கள். அசல் வழக்கு எண்.263/2015 என்ற வழக்கு தாக்கல் செய்துள்ள வசந்தா என்பவரின் மாமனார் இந்த வழக்கு 1ம்வாதி சீனிவாசன் ஆவார். மேலும் சமூகம் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.264/2015 என்ற வழக்கினை தாக்கல் செய்துள்ள கந்தசாமி செட்டியாரின் மருமகன் தான் இந்த வழக்கு 2ம் வாதி ஆவார். மேற்படி வழக்கில் தரப்பினராக உள்ள சுப்புலட்சுமிஅம்மாள் கந்தசாமி செட்டியாரின் மனைவி ஆவார். அந்த வகையில் அவர் இந்த வழக்கு 2ம் வாதியின் மாமியார் ஆவார். மேலும் அசல் வழக்கு எண்.254/2015 என்ற வழக்கு தாக்கல் செய்துள்ள சி.அ.ராமசாமி என்பவரும் சி.அ.வேலுச்சாமி என்பவரும் இந்த வழக்கு வாதிகளுக்கு உறவினர்கள் ஆவார்கள். பிரதிவாதிகள் உறவின்முறையை சேர்ந்தவர்கள் ஆட்சேபணைதாரர்களாக மனு தாக்கல் செய்து இருக்கின்றார்கள். எனவே ஆட்சேபணைதாரர்களையும் வழக்கில் தரப்பினராக சேர்க்க வேண்டும் என்று சமூகம் நீதிமன்ற உத்தரவு ஏற்படுத்தி இருக்கின்றது. ஆட்சேபணைதாரர்களை வழக்கில் சேர்க்காது வழக்கை மேல்நடத்துவது தேவையான கட்சிகார்களை சேர்க்காத தோசத்திற்கு உள்ளாகி இருக்கின்றது அந்த வகையில் வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டியது. எனவே, 1,2 பிரதிவாதிகளின் செலவுத்தொகையுடன் தள்ளுபடிசெய்ய வேண்டியது.

5. **<u>கடந்த 21.04.2025ம் தேதி 1ம்பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்து, 2, 5 முதல் 269 பிரதிவாதிகள் தமதாக ஏற்றுக்கொண்ட எதிர்வழக்குரையின் சுருக்கம்</u>**:–

வாதிகளின் சீர்திருத்த பிராதில் கண்ட விசயங்கள் யாவும் புரட்டானவை ஆகும். தாவாச் சொத்தில் பிரதிவாதிகள் வழக்கிற்கு பிற்பாடு அக்கிரமமாக கட்டுமானங்கள் கட்டியுள்ளதாக கூறியிருப்பது புரட்டானது ஆகும். தாவாச் சொத்தில் பிரதிவாதிகள் முழுமையாக சமுதாயக்கூடம் பிராதிற்கு முன்பாகவே கட்டி விட்டார்கள். அதனை கட்டும் காலத்தில் வாதிகள் எந்தவித ஆட்சேபணயும் செய்ய கிடையாது. எனவே வாதிகள் முரண்தடை தோஷத்தால் தடை செய்யப்பட்டு இருக்கின்றார்கள். வழக்கு

அறிந்தும் வாளாதிருத்தல் தோசத்தாலும் பாதிக்கப்பட்டு உள்ளது. குறிப்பாக எந்த தேதியில் வாதிகள் கட்டுமானங்கள் கட்டினார்கள் என்பது குறித்தோ, என்ன கட்டுமானங்கள் கட்டியுள்ளார்கள் என்பது குறித்தோ பிராதில் யாதொரு விபரமும் கொடுக்கப்படவில்லை. வாதிகளும் அவர்கள் கோரும் செயல் உறுத்துக்கட்டளை பரிகாரம் கிடைக்கக்கூடியது இல்லை. எனவே பிரதிவாதிகளின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டியது.

**6.** இவ்வழக்கின் வழக்குரை, எதிர்வழக்குரை ஆகியவற்றை பரிசீலனை செய்து வழக்கை தீர்மானிக்கும் பொருட்டு, இந்நீதிமன்றத்தால் கீழ்கண்ட எழுவினாக்கள் 04.10.2023 தேதியில் வனையப்பட்டன.

**<u>வழக்கு எழுவினாக்கள்</u>:-**

| | |
|---|---|
| 1. | Whether the suit schedule property is Kalam as claimed by the plaintiff? |
| 2. | Whether the plaintiff are entitled to the relief of permanent injunction as against D1, D2 as prayed for? |
| 3. | Whether the suit filed by plaintiffs under the representative capacity is maintainable? |
| 4. | Whethe the the plaintiffs are entitiled to the mandatory injunction as prayed for against D1, D2? |
| 5. | Whether the plaintiff are entitled to the relief of permanent injunction as against D3 as prayed for? |
| 6. | Whether the plaintiffs are entitled to the relief of permanent injunction as agaisnt D4 as prayed for? |
| 7. | To what other relief the parties are entitled? |

**7.** வாதிகள் தரப்பில், 2ம் வாதி சுந்தரராஜன் வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, அவர் மூலம் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.11 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. கனகராஜ் என்பவர் வா.சா.ஆ.2 ஆக விசாரிக்கப்பட்டு, அவர் மூலம் வா.சா.ஆ.12 குறியீடு செய்யப்பட்டுள்ளது. 1,2 மற்றும் 5 முதல் 269 பிரதிவாதிகள் தரப்பில், 1ம் பிரதிவாதி ராமசாமி பி.வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, அவர் மூலம் பி.வா.சா.ஆ.1 முதல் பி.வா.சா.ஆ.15 வரையிலான ஆவணங்கள் குறியீடு

செய்யப்பட்டுள்ளது. 4ம் பிரதிவாதி தரப்பில் வாய்மொழி சாட்சியம் முன்னிடவில்லை. சான்றாவணங்களும் தாக்கல் இல்லை.

8. இருதரப்பு கேட்கப்பட்டது. பிரதிவாதிகள் தரப்பில் Kaluvu –Vs–Kathavarayan on 12 Junuary, 2017 Kaluvu –Vs– Kathavarayan. S.A.No.717 of 2008 Mr.Ramakrishnan rep. by his Power of Attorney Holder Mr.E.R.Ravichandran –Vs– Executive officer, Arulmighu Badrakaliyamman Koil and 1 other. S.A.No.122 of 2013 S.Dayalan @ Selvam and 4 others –Vs– D.Namratha, A.S.No.78 of 2024 Mr.Manivannan –Vs– Mrs and 2 others முன்தீர்ப்புகள் சுட்டிக்காட்டி வாதிடப்பட்டது. இருதரப்பு சாட்சிய, சான்றாவணங்களின் அடிப்படையில் எழுவினாக்களுக்கு கீழ்கண்டவாறு தீர்வு காணப்படுகிறது.

**<u>எழுவினா–1 க்கான தீர்வு</u>:–**

(1) தாவா வழக்கு சொத்து வாதிகள் கோரியுள்ள படி களம் தானா? என்று பார்க்கவேண்டியுள்ளது. 06.07.1949ம் தேதியிட்ட பதிவு செய்த கிரையப்பத்திரம் மூலம் தாவா சொத்தானது பந்தல்குடி கிராமம் லிங்காபுரம் தெருவில் வசிக்கும் 24 மனை தெலுங்கு செட்டியார்கள் ஜாதியைச் சேர்ந்தவர்கள் களமாக பயன்படுத்துவதற்காக தாவா சொத்து வாங்கப்பட்டது என்பது இருதரப்பிலும் ஒப்புக்கொள்ளப்பட்ட சங்கதி. தாவா சொத்து களமாக பயன்படுத்தப்பட்டு வந்ததை 1,2 பிரதிவாதிகள் இடைஞ்சல் செய்து குழிதோண்டி விட்டார்கள் என வழக்கு தாக்கல் செய்து, பின்னர் அதில் கட்டுமானங்கள் கட்டிவிட்டார்கள் என்று, அதனை இடித்து தர செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி பிராது திருத்தம் செய்யப்பட்டுள்ளது. பிரதிவாதிகள் தரப்பில், தாவா சொத்தானது பிராதில் சொல்லியுள்ளது போன்று 06.07.1949 தேதியில் கந்தன் செட்டியார் வகையறாவிடமிருந்து பிரதிவாதிகள் சமூகத்தை சேர்ந்தவர்கள் களமாக பயன்படுத்துவதற்காக கிரையம் பெறப்பட்டது என்றும், ஆதியில் களமாக பயன்படுத்தப்பட்டது என்றும், அதன் பின்னிட்டு விவசாய நிலங்கள் குறைந்து சுற்றுபுறங்களில் வீடுகள் வந்து விட்டதால் களமாக உபயோகிக்காமல் இருந்து வந்தது

என்றும், 20 வருடங்களுக்கு மேலாக களமாக பயன்படுத்தாமல் தாவா சொத்து இருந்ததால் அதில் திருமண மண்டபம் கட்டுவதற்கு பிரதிவாதிகள் 2010–ல் முடிவு செய்து 2014–ல் பிரதிவாதிகள் சமூகத்தினர் தீர்மானம் போட்டு வரி வசூல் செய்து வழக்கிற்கு முன்பாகவே கட்டிடத்தை கட்டிவிட்டதாக சொல்லியுள்ளார்கள். களமாக பயன்படுத்துவதற்காக வா.சா.ஆ.2–ன் படி கிரையம் வாங்கப்பட்டு களமாக பயன்படுத்தப்பட்டது என்பதால் தாவா சொத்து களம் என்று தெரியவருகிறது.

(2) தாவா சொத்தானது 08.11.2015 வரை களமாக பயன்படுத்தப்பட்டது என்பதற்கு ஆதரவாக எந்த ஆவணங்களும் வாதிகள் தரப்பில் தாக்கல் இல்லை என்பது தெரியவருகிறது. 2014 ம் வருடத்தில் கட்டுமானம் கட்டியதாக வா.சா.1–ன் சாட்சியத்தில் ஒப்புக்கொண்டுள்ளார். அந்த சமயம் காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததற்கு ஆவணங்கள் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. இந்த வழக்கானது 28.11.2015 ம் தேதி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 2014 ம் வருடமே கட்டிடம் கட்ட ஆரம்பித்தார்கள் என வா.சா.1 ஒப்புக்கொண்டுள்ள நிலையில், 08.11.2015 ம் தேதி குழி தோண்ட முயற்சி செய்ததாக நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பது தெரியவருகிறது.

(3) 2015–லிருந்து தற்போது வரை அந்த இடத்தில் கட்டிடம் உள்ளது என்பதும், அந்த கட்டிடத்தில் 1,2 பிரதிவாதிகள் போட்ட பூட்டிற்கு மேல், மேல்பூட்டு வாதிகள் 2023–ல் போட்டுள்ளார்கள் என்பதும் வா.சா.1–ன் சாட்சியத்திலிருந்து தெரியவருகிறது. 08.11.2015 வரை களமாக பயன்படுத்தப்பட்டதற்கு ஆவணங்கள் தாக்கல் இல்லை. பிராதில் சொல்லியுள்ள சங்கதிகளின் படி 08.11.2015–ல் குழி தோண்ட முயற்சி செய்தார்கள் அது வரை களமாக இருந்தது என்பது விவாதிக்கப்பட வேண்டியது. பிராது சங்கதிகளை வாதிகள் நிரூபிக்க வேண்டியுள்ளது. ஆகவே, தாவா சொத்து களமாக உபயோகிக்க வா.சா.ஆ.2–ன் படி கிரையம் பெறப்பட்டு களமாக

உபயோகப்படுத்தப்பட்டு தற்போது பூமியில் களமாக இல்லை என்று எழுவினா 1–ற்கு தீர்வு காண்கிறது.

**<u>எழுவினா 2–க்கு தீர்வு</u>:–**

(1) தாவா சொத்தை களமாக பயன்படுத்துவதை பிரதிவாதிகளோ அவர்களை சார்ந்தவர்களோ இடைஞ்சல் செய்யவோ, வேறு கட்டுமானங்கள் கட்டவோ கூடாது என்று நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கேட்கப்பட்டுள்ளது. 1,2 வாதிகள் தங்களுக்காகவும், பந்தல்குடி கிராமம் லிங்காபுரம் தெருவில் வசிக்கும் 24 மனை தெலுங்கு செட்டியார்கள் ஜாதியைச் சேர்ந்த விவசாய மக்களின் பிரதிநிதிகள் ஸ்தானத்திலும் இந்த வழக்கை தாக்கல் செய்வதாக சொல்லியுள்ளார்கள். தாவாச் சொத்தில் கிரைய காலம் முதல் வாதிகள் ஜாதியினர் தங்கள் விவசாய பொருட்களை கொண்டு வந்து போட்டு களமாக நெடுகிலும் பயன்படுத்தி வருகிறார்கள். என்றும், கிராமத்தில் வேறு களமும் இல்லை என்றும், நெடுஞ்சாலையை பொதுமக்கள் களமாக பயன்படுத்தினால் போக்குவரத்து இடைஞ்சலும், விபத்துகளும் ஏற்பட்டு, காவல்துறையினரால் வழக்கு பதிவு செய்ய வாய்ப்பு ஏற்படும் என்றும் தாவா சொத்தை களமாக பயன்படுத்துவதற்காக கிரையம் வாங்கப்பட்டதால் அதை வேறு உபயோகத்திற்கு பயன்படுத்த முடியாது என்றும், அவ்வாறு பயன்படுத்தினால் களம் இல்லாமல் பெருத்த கஷ்ட நஷ்டம் ஏற்படும் என்று பிராதில் சொல்லப்பட்டுள்ளது. பிராதில் வாதிகள் சொல்லியுள்ள படி தாவா சொத்து வழக்கு தாக்கல் செய்யும் வரை களமாக பயன்படுத்தப்பட்டது என்பதை நிரூபிக்க வேண்டியது வாதிகள் தான்.

(2) பிராதில் வாதிகள் களமாக பயன்படுத்துவதை இடைஞ்சல் செய்யக்கூடாது என பரிகாரம் கேட்கப்பட்டுள்ளது. 08.11.2015–ல் குழிதோண்டிவிட்டதாக சொல்லப்பட்டுள்ளது. அப்படியெனில் 08.11.2015 வரை தாவா சொத்து களமாக பயன்படுத்தியிருக்க வேண்டும். அவ்வாறு தாவா சொத்து 08.11.2015 வரை களமாக பயன்படுத்தப்பட்டது என்பதற்கு வாதிகள் தரப்பில் ஆவணங்கள் தாக்கல்

செய்யவில்லை. வாதிகள் வழக்கு தாக்கல் செய்யும் போதே அது களமாக இல்லை குழி தோண்டப்பட்டுவிட்டது கட்டிடம் கட்ட முயற்சிப்பதாக சொல்லி வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. சட்ட விரோதமாக ஆட்களுடன் வந்து 08.11.2015–ல் குழிகள் தோண்டிவிட்டனர் என்றும், 1,2 பிரதிவாதிகள் தங்கள் சுயநலத்திற்காக திருமணமண்டபம் கட்டி லாபம் அடைய நினைக்கின்றனர் என்றும், குழிகளை மூடி தாவா சொத்தை முன்பு இருந்த நிலையில் ஏற்படுத்தி கொடுக்க செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்யப்படுவதாக 28.11.2015–ம் தேதி அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

(3) வா.சா.1ன் சாட்சியத்தின் படி 2014–ம் வருடமே கட்டிடம் கட்ட ஆரம்பித்ததாக சொல்லியுள்ளார். தாவா சொத்தில் திருமணமண்டபம் கட்டுவதற்கு 2014ம் வருடமே பிரதிவாதிகள் சமூகத்தில் தீர்மானம் போட்டார்கள் என்பதை இல்லை என வா.சா.1 மறுக்கவில்லை. தனக்கு தெரியாது என்று தான் சொல்லியுள்ளார். 1,2 பிரதிவாதிகளின் உறவின்முறையில் வாதிகள் உறுப்பினர்களாக இருந்தார்கள் என்றும், அவர்களிடமும் திருமண மண்டபம் கட்டுவதற்கு தலைகட்டு வரி ரூ.1000/– வசூலிக்கப்பட்டது என்றும் பிரதிவாதிகள் தரப்பில் பி.வா.சா.ஆ.8 முதல் 11 வரையான ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதனை **வா.சா.1யிடம் குறுக்கு விசாரணை செய்த போது கட்டிடம் கட்டுவதற்கு தலைகட்டு வரி ரூபாய் 1000/– கொடுத்துள்ளோம் என்றால் சரியல்ல. அதன் பின்னர் கட்டிடம் கட்ட ஆரம்பித்தார்கள் என்றால் சரிதான்** என்று சொல்லியுள்ளார். கட்டிடம் கட்டுவதற்கு வரி கொடுக்கவில்லை என்று சொல்லியுள்ள வா.சா.1 அவ்வாறு வரி வசூலிக்கப்பட்டு கட்டிடம் கட்ட ஆரம்பித்தார்கள் என்பதை ஒப்புக்கொண்டுள்ளார். 2014–ல் கட்டிடம் கட்டும் போது புகார் கொடுத்தோம் என்று, வா.சா.1–ம் புகார் கொடுக்கவில்லை என்று வா.சா–2ம் ஒன்றுக்கொன்று முரண்பட்டு சாட்சியம் அளித்துள்ளார்கள்.

(4) வழக்கு தாக்கல் செய்யும் போதே கட்டிடம் கட்டக்கூடாது என்று இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் கேட்டுள்ள வாதிகளின் மனு 30.06.2016–ல் தள்ளுபடி செய்யப்பட்ட பிறகு அதனை எதிர்த்து மேல்முறையீடு செய்யவில்லை என்று தெரிகிறது. 2011ம் வருடமே தீர்மானம் போடப்பட்டு வரி வசூலிக்கப்பட்டுள்ளது என்பதும், 1ம் வாதியும் திருமண மண்டபம் கட்டும் குழுவில் மெம்பராக இருந்துள்ளார் என்பதும் பி.வா.சா.ஆ.10 முதல் 11 வரையான ஆவணங்களை பார்க்கும் போது தெரியவருகிறது. மிசின் வைத்து அறுவடை செய்கிறார்கள் என்று வா.சா.1, 2 சொல்லியுள்ளனர். 6 வருடத்திற்கு முன்புவரை களமாக பயன்படுத்தியதாக 2025–ல் வா.சா.1 அளித்துள்ள சாட்சியத்தை தொடர்புபடுத்த ஆவணங்கள் தாக்கல் இல்லை. அது நம்பும்படியாகவும் இல்லை ஏனென்னில் 2015–லேயே வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ஆனால் 6 வருடத்திற்கு முன்பாக களமாக பயன்படுத்தினோம் என கூறியுள்ளார். களத்தை பயன்படுத்துவதற்கு வரி வசூல் செய்ததாக வா.சா.1 சாட்சியம் அளித்துள்ளதற்கும் ஆவணம் தாக்கல் இல்லை. 2014–லேயே கட்டிடம் கட்ட ஆரம்பித்து விட்டார்கள் என்று வா.சா.1 சொல்லியுள்ளதால் வழக்கு மூலம் எப்போது ஆரம்பிக்கிறது என்பதில் தெளிவு இல்லை. தாவா சொத்து சம்பந்தமாக மற்ற நபர்கள் தாக்கல் செய்த வழக்குகளில் பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்வழக்குரையிலேயே தாவா சொத்தில் பொருட்கள் வைப்பதற்கான அறை கட்டப்பட்டது, ஆழ்துளை கிணறு போடப்பட்டுள்ளது என்பதும் குறிப்பிட்டு சொல்லப்பட்டுள்ளது. வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாகவே அறையும், ஆழ்துளை கிணறும் அமைக்கப்பட்டுள்ளது என்பதை வா.சா.2 தெரியாது என்று சொல்லியுள்ளார். தலைவராக இருப்பதாக சொல்லும் வா.சா.2 தாவா சொத்து சம்பந்தமாக எல்லா கேள்விகளுக்கும் தெரியாது என்றே பதில் அளித்துள்ளார்.

(5) தாவா சொத்தை பொறுத்து நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியுள்ள வாதிகள் தாவா சொத்து தங்களது சமூக விவசாய மக்களுக்கு பாத்தியப்பட்ட களம் என்று விளம்புகை பரிகாரம் கோரியிருக்க வேண்டும். அவ்வாறு விளம்புகை

பரிகாரம் எதுவும் கேட்கப்படாமல் அதனை பொறுத்து நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கேட்க முடியாது. தாவா சொத்தானது களமாக இல்லாமல் கட்டிடம் கட்டப்பட்டுவிட்டது. அது களமாக பயன்படுத்தப்படவில்லை என்று பிரதிவாதிகள் எதிர்வாதம் செய்துள்ளனர். வா.சா.1, வா.சா.2 இருவரும் தாவா சொத்து வாதிகளுக்கு பாத்தியமான களம் என்று வழக்கு தாக்கல் செய்துள்ளதாக சாட்சியம் அளித்துள்ளனர். என்ன பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பதே தலைவர், செயலாளராக சொல்லிக்கொள்ளும் வா.சா.1, 2–ற்கு தெரியவில்லை. தாவா சொத்து தெலுங்கு செட்டியார் விவசாய மக்கள் உறவின்முறைக்கான களம்தான் என்று விளம்புகை பரிகாரம் கோராமல் அதன் தொடர்ச்சியான நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் மட்டும் கேட்கப்பட்டுள்ளது சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்பதாலும் பிராதில் சொல்லியுள்ள 08.11.2015–க்கு முன்பாகவே கட்டுமானங்கள் கட்டப்பட்டுவிட்டது என்பதாலும் வாதிகள் கோரியுள்ள நிரந்தரஉறுத்துக்கட்டளை பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கதக்கதல்ல என்று எழுவினா 2–ற்கு இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

**<u>எழுவினா 3–க்கு தீர்வு</u>:–**

(1) வாதிகள் மோசடியாக விவசாய மக்களின் பிரதிநிதிகள் ஸ்தானத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்று பிரதிவாதிகள் எதிர்வாதம் செய்துள்ளனர். வாதிகள் பிரதிநிதிகள் ஸ்தானத்தில் தாக்கல் செய்த வழக்கு நிலைக்கத்தக்கதா? என்று பார்க்க வேண்டியுள்ளது. வாதிகள் தாவா வழக்கை தங்களுக்காகவும், பந்தல்குடி கிராமம் லிங்காபுரம் தெருவில் வசிக்கும் 24 மனை தெலுங்கு செட்டியார்கள் விவசாய மக்களின் பிரதிநிதிகள் ஸ்தானத்திலும் தாக்கல் செய்துள்ளதாக பிராதில் சொல்லப்பட்டுள்ளது. பிரதிநிதிகள் ஸ்தானத்தில் வாதிகள் வழக்கு தாக்கல் செய்துள்ளதற்கு ஆட்சேபணை தெரிவித்து 264 நபர்கள் எதிர்ப்பாளர்களாக இந்த வழக்கில் சேர்க்கப்பட்டுள்ளார்கள். 1, 2 பிரதிவாதிகள் அவர்களது சுயநலத்திற்காக திருமண மண்டபம் கட்டி லாபம் அடைய நினைக்கின்றனர் என்று பிராதில் சொல்லியுள்ள வாதிகள் அவர்களை தனிப்பட்ட முறையில் காண்பித்து வழக்கு தாக்கல்

செய்யவில்லை. 1,2 பிரதிவாதிகள் தங்களுக்காகவும், பந்தல்குடி கிராமம் லிங்காபுரம் தெருவில் வசிக்கும் 24 மனை தெலுங்கு செட்டியார்கள் சமூக பிரதிநிதிகள் ஸ்தானத்திலும் வழக்காடுவதாக தான் வாதிகளால் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

(2) 1,2 பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் லிங்காபுரம் 24 மனை தெலுங்கு செட்டியார்கள் உறவின்முறை சுமார் 250 தலைக்கட்டுக்கள் உள்ளார்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி உறவின் முறை சார்பாக 1,2 பிரதிவாதிகள் இந்த வழக்கில் எதிர்வாதம் செய்துள்ளனர். தெலுங்கு செட்டியார்கள் ஜாதியைச் சேர்ந்த விவசாய மக்களின் பிரதிநிதிகள் என்று சொல்லும் வாதிகள் அவ்வாறு ஒரு உறவின்முறை உள்ளது என்பதை முதலில் நிரூபிக்க வேண்டியது. 5 முதல் 269 பிரதிவாதிகளுக்கும், 1,2 பிரதிவாதிகளின் வழக்கறிஞர் மூலம் வக்காலத்து தாக்கல் செய்து, 1,2, 5 முதல் 269 பிரதிவாதிகளால் எதிர்வழக்காடப்பட்டுள்ளது. பிரதிவாதிகளின் உறவின்முறையில் மொத்தம் 250 தலைக்கட்டு இருக்கின்ற நிலையில், ஆட்சேபணை செய்துள்ள பிரதிவாதிகளும் சேர்த்து பார்க்கும் போது மேற்படி உறவின்முறை மக்கள் அனைவரும் பிரதிவாதிகளுக்கு ஆதரவாக இந்த வழக்கில் ஆஜராகியுள்ளனர் என்பது தெரிகிறது.

(3) விவசாய மக்களின் உறவின்முறை உள்ளது அந்த உறவின்முறையில் இந்த வழக்கை தாக்கல் செய்ய அதிகாரம் வழங்கப்பட்டது என்பது சம்பந்தமாக ஆவணங்கள் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை. வா.சா.ஆ.1 29.05.1948 தேதிய சுப்பம்மாள் என்பவர் கிரையம் பெற்ற சான்றிட்ட நகல். வா.சா.ஆ.2 ஆக 06.07.1949–ல் கொப்புல் செட்டியார் மற்றும் நான்கு பேர்கள் கந்தன் செட்டியார் வகையறாவிடமிருந்து தாவா சொத்தை கிரையம் பெற்ற சான்றிட்ட நகல் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வா.சா.ஆ.3 07.06.1949–ல் குருவம்மாளுக்கு சின்ன அய்யணன் எழுதிக்கொடுத்த அடமான பத்திரம். வா.சா.ஆ.4 23.09.1952–ம் தேதிய வெங்கிடராமசாமி நாயக்கருக்கு அய்யணன் செட்டியார் எழுதிக்கொடுத்த

கிரையப்பத்திரம். வா.சா.ஆ.5 21.07.1994–ல் குருசாமிக்கு, சின்னசோலையம்மாள் என்ற செல்லத்தாய் வகையறா எழுதிக்கொடுத்த கிரையப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வா.சா.ஆ.6 1ம் வாதியின் பெயரிலுள்ள பட்டா. வா.சா.ஆ.7 2ம் வாதியின் பெயரிலுள்ள பட்டா. வா.சா.ஆ.8 அசல் வழக்கு எண்.263/2015 வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட நீதிமன்ற ஆணையர் அறிக்கை மற்றும் வரைபடம். வா.சா.ஆ.9 தாவா சொத்தின் நிலையை காட்டக்கூடிய புகைப்படங்கள். மேற்படி புகைப்படங்கள் யாரால் எப்போது எடுக்கப்பட்டது என்பதற்கான ஆவணங்கள் தாக்கல் செய்யப்படவில்லை. வா.சா.ஆ.10 வசந்தா என்பவருக்கு குருசாமி எழுதிக்கொடுத்த கிரையப்பத்திரம். வா.சா.ஆ.11 வசந்தா பெயரில் ஏற்பட்ட பட்டா மாறுதல் உத்தரவு. பிரதிநிதிகள் ஸ்தானத்தில் வழக்கு தாக்கல் செய்வதற்கு வாதிகள் உறவின்முறை உள்து என்பதற்கு அதிகாரம் வழங்கப்பட்டது என்பதற்கும் ஆவணங்கள் தாக்கல் இல்லை என்பது தெரியவருகிறது.

(4) வா.சா.1–ன் சாட்சியத்தின் படி தாவா சொத்தானது கொப்புசித்தம்பட்டி கிராமத்தில் உள்ளது என்று தெரியவருகிறது. ஆனால் பிராது சொத்து விபரத்தில் பந்தல்குடி கிராமத்தில் இருப்பதாக காண்பிக்கப்பட்டுள்ளது. தற்போது வரை பிராது சீர்திருத்தம் செய்யப்படாமல் பந்தல்குடி கிராமத்தில் இருப்பதாகவே குறிப்பிடப்பட்டுள்ளது. தாவா சொத்து நத்தத்தில் உள்ள குடியிருப்பு பகுதி. செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியுள்ள வாதிகள் சொத்து விபரத்தில் வா.சா.ஆ.2–ல் உள்ள அளவுகளை குறிப்பிடாமல் கிழமேல் 102 அடி தென்வடல் 73 அடி என்று காண்பிக்கப்பட்டுள்ளது. அதற்கான ஆவணங்கள் தாக்கல் இல்லை. அளவுகள் தவறுதலாக கூடுதலாக வா.சா.ஆ.2–ல் காண்பித்துவிட்டதாக பிராதில் சொல்லியுள்ள நிலையில், அளவுகளைப் பொறுத்து வா.சா.1–ன் சாட்சியம் முரண்பாடாக உள்ளது. வா.சா.1–ன் குறுக்கு விசாரணையில் **சர்வே எண் தெரியாது, பிராதில் நத்தம் சர்வே எண்.140/1 என குறிப்பிட்டுள்ளேன் அது சரியா? தவறா? என்றால் தெரியாது. தாவாச் சொத்தின் விஸ்தீரணம் எவ்வளவு என தனக்கு தெரியாது. தாவா சொத்தை நான் டேப்**

**வைத்து அளந்து பார்க்கவில்லை. கிழமேல் 102 அடி, தென்வடல் 73 அடி என்று எவ்வாறு குறிப்பிட்டேன் என்றால் நான் குறிப்பிடவில்லை. தாவா சொத்தின் கிழமேல், தென்வடல் அளவு எனக்கு தெரியாது என்று வா.சா.1 சாட்சியமளித்துள்ளார். அவருடைய சாட்சியத்தை பார்க்கும் போது பிராது வா.சா.1 சொல்லி தான் தயார் செய்யப்பட்டதா? என்று சந்தேகிக்கும் வகையில் வா.சா.1 சாட்சியம்** அமைந்துள்ளது.

(5) 1ம் வாதி எந்த பொறுப்பிலும் இல்லை. 2ம் வாதி வாதிகள் உறவின்முறையின் செயலாளர் என்றும், பொருளாார் கோவிந்தராஜ் என்றும் சொல்லப்பட்டுள்ளது. தலைவர், செயலாளர் மூலம் வழக்கு தாக்கல் செய்யவில்லை. பொருளாளரை சாட்சியாக கூட விசாரிக்கவில்லை. வா.சா.2 தானாக சாட்சியம் அளிக்க வந்ததாகவும் தன்னை யாரும் அழைத்து வரவில்லை என்றும் கூறியுள்ளார். வா.சா.2 ஆக விசாரிக்கப்பட்டுள்ள நபர் வாதிகள் சொல்லியுள்ள விவசாய மக்களின் உறவின்முறையின் தலைவர் என சாட்சியமளித்துள்ளார். அவரின் சாட்சியத்தில் தாவா சொத்து சம்பந்தமாக வாதிகள் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்வதற்கு எந்த அதிகாரமும் வழங்கப்படவில்லை. அது சம்பந்தமாக தீர்மானம் எதுவும் போடப்படவில்லை இனிமேல்தான் தீர்மானம் போடுவோம் என சொல்லியுள்ளார். அவ்வாறு தீர்மானம் எதுவும் பிறப்பிக்கப்படாமல் எதன் அடிப்படையில் வாதிகள் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளனர் என்பதற்கு தகுந்த விளக்கம் தரப்படவில்லை. வாதிகளின் உறவின்முறை தலைவராக இருக்கும் வா.சா.2-ன் சாட்சியத்தில் தீர்மானம் எதுவும் போடவில்லை என்று சொல்லியுள்ளதை பார்க்கும் போது வாதிகளுக்கு வழக்கு தாக்கல் செய்ய அதிகாரம் இல்லை என்பது தெரியவருகிறது. பிரதிவாதிகளின் உறவின்முறையில் இருந்த நபர்கள் தான் வாதிகள் என்பது தெரிகிறது. ஆனால் பிறந்ததிலிருந்து வாதிகளின் உறவின்முறை உள்ளது என்று வா.சா.1 கூறியுள்ளது நம்பும்படியாக இல்லை. வா.சா.2-ன் சாட்சியத்தில் வாதிகளும், பிரதிவாதிகளும் இதற்கு முன்பு ஒரே உறவின் முறையில் தான் இருந்தோம், வாதிகளின் உறவுமுறை 2016-ல் தான் ஆரம்பிக்கப்பட்டது என சொல்லியுள்ளார்.

வா.சா.1 மற்றும் வா.சா.2–ன் சாட்சியம் ஒன்றுக்கொன்று முரண்பட்டுள்ளது. வாதிகளின் வழக்கிற்கு ஆதரவாக இல்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

(6) வாதிகள் உறவின்முறை பதிவு செய்யப்படவில்லை என்று சொல்லியுள்ளனர். பதிவு செய்யப்படாத உறவின்முறையாக இருந்தாலும் தீர்மானம் நோட்டு, மினிட் புத்தகம். வரசெலவு கணக்கு நோட்டு, ரசீது புத்தகம் அனைத்தும் உறவின்முறையால் பராமரிக்கப்படும் வாதிகள் சொல்லியுள்ள உறவின்முறையில் மேற்படி ஆவணங்கள் பராமரிக்கப்பட்டது என்று வா.சா.1 சாட்சியம் அளித்துள்ளார். ஆனால் அவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை. விவசாய மக்கள் 200–க்கு மேல் இருக்கிறார்கள் என வா.சா.1 சொல்லியுள்ளார், அந்த வகையில் வாதிகளின் உறவின்முறையில் எத்தனை பேர் விவசாயிகளாக உள்ளார்கள் என்பதற்கு பெயர் பட்டியல் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. விவசாய நிலங்கள் குறைந்து விட்டன பாதிக்குமேல் வேறு வேலைக்கு சென்றுவிட்டார்கள் என்பதை வா.சா.1 தனது விசாரணையில் சொல்லியுள்ளார். தாவா சொத்து நத்தம் குடியிருப்பு பகுதி. வருவாய் அதிகாரிகளை விசாரித்து தாவா சொத்தை சுற்றி விவசாயம் செய்து வருகிறார்கள் என்பதற்கு (அ) பதிவேடு, சாகுபடி அடங்கல் கணக்கு தாக்கல் செய்து விசாரிக்க முன்வரவில்லை. 1,2 வாதிகள் விவசாயிகள் என்பதற்கு கூட ஆவணங்கள் தாக்கல் செய்யப்படவில்லை. அவர்கள் பெயரிலுள்ள பட்டா தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி பட்டாவை மட்டும் வைத்து 1,2 வாதிகள் விவசாயம் செய்து வருகிறார்கள் என்று எடுத்துக்கொள்ள இயலாது. விவசாயம் செய்து வருகிறோம் என்பதற்கு அடங்கல் கணக்கு, வரிரசீது எதுவும் தாக்கல் இல்லை. மற்றொரு சாட்சியான வா.சா.2 வாதிகளின் உறவின்முறை தலைவர் ஆவார். வா.சா.1 மேற்படி வாதிகள் உறவின்முறையின் செயலாளர் வா.சா.2 விவசாயம் செய்து வருகிறார் என்பதற்கும் ஆவணங்கள் தாக்கல் இல்லை. அவருடைய ஆதார் அட்டை மட்டும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

(7) வருவாய் ஆவணங்களில் தாவா சொத்தானது எவ்வாறு வகைப்பாடு செய்யப்பட்டுள்ளது என்று தெரியாது என்றும், தாவா சொத்து களம் என்பதற்கு

ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான் என்றும், தாவா சொத்திற்கு வாதிகளின் உறவின்முறைகளின் பெயரில் பட்டா உள்ளது என்றும், தாவா சொத்தில் கட்டிடம் கட்டுவதற்கு தீர்மானம் போட்ட விபரம் தெரியாது என்றும், ரூபாய் 1000/- கொடுக்க வேண்டும் என்ற விபரம் தனக்கு தெரியாது என்றும் வா.சா.2 சொல்லியுள்ளார். கட்டிடம் கட்ட தீர்மானம் எதுவும் போடவில்லை என மறுக்கவில்லை. தெரியாது என்று வா.சா.2 அளித்துள்ள சாட்சியம் வாதிகளின் வழக்கிற்கு முரணாக உள்ளது. 5, 6 வருடத்திற்கு முன்பு ஏக்கருக்கு ரூபாய் 10 அல்லது 50 ரூபாய் களமாக பயன்படுத்த உறவின்முறைக்கு வரி கொடுத்தோம் என வா.சா.2 சொல்லியுள்ளதற்கு சாட்சிய, சான்றாவணங்கள் முன்னிடவில்லை. தாவா வழக்கை தாக்கல் செய்வதற்கு இனிமேல் தான் தீர்மானம் போடவேண்டுமென்று வா.சா.2 சொல்லியுள்ளார். வாதிகளோ, அல்லது வாதிகளின் உறவின்முறை சம்பந்தப்பட்டவர்களோ விவசாயம் செய்து வருகிறார்கள், தாவா சொத்தை களமாக பயன்படுத்தி வந்தார்கள் என்பதற்கு எந்த ஒரு நபரும் சாட்சியமளிக்கவில்லை. வாதிகள் தாவா சொத்தை பொறுத்து வழக்கு தாக்கல் செய்த நபர்களின் நெருங்கிய உறவினர்கள் என்று கூறியுள்ள நிலையில், விவசாயம் செய்து வருவதாக சொல்லும் நபர் யாரும் சாட்சியமளிக்க முன்வரவில்லை.

(8) பிரதிவாதிகள் தரப்பில் வாதிகள் தாவா சொத்தின் அருகே உள்ள மற்ற நிலஉரிமையாளர்களின் உறவினர்கள் என்றும், அசல் வழக்கு எண்.263/2015 வழக்கு தாக்கல் செய்துள்ள வசந்தா என்வரின் மாமனார் 1ம் வாதி என்றும், தாவா சொத்து சம்பந்தமாக அசல் வழக்கு எண்.254/2015 வழக்கு தாக்கல் செய்துள்ள இராமசாமி என்பவர் வாதிகளின் உறவினர் என்றும், தாவா சொத்து சம்பந்தமாக அசல் வழக்கு எண்.264/2015 வழக்கை தாக்கல் செய்துள்ள கந்தசாமி செட்டியாரின் மருமகன் 2ம் வாதி என்றும், 3ம் நபர்களுக்கு தாவா சொத்தை அக்கிரமமாக கைப்பற்றுவதற்கு அவர்களுடைய தூண்டுதலின் பேரில் வாதிகளால் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக பிரதிவாதிகள் எடுத்துரைத்தனர். மேற்படி உறவுமுறைகளைப் பற்றி வா.சா.1-யிடம் குறுக்குவிசாரணை செய்து அவரால் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது.

மேலும் வாதிகள் தரப்பில் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.8, 10, 11 வசந்தா என்பவரால் இவ்வழக்கில் தாக்கல் செய்ய எடுத்துக்கொடுக்கப்பட்டது என்பதும் தெரியவருகிறது.

(9) பிரதிவாதிகள் உறவின்முறை நடத்திய 24.04.2014–தேதிய கூட்டத்தில் 15–வது நபராக வா.சா.1 கையெழுத்து செய்துள்ளார் என்பதை கேட்ட போது ஞாபகம் இல்லை என சொல்லியுள்ளார். தான் பிரதிவாதிகளின் உறவின்முறையில் உறுப்பினராக கூட இல்லை என மறுத்துள்ள நபர் அவ்வாறு கையெழுத்து எதுவும் செய்யவில்லை என்று தான் சொல்லியிருக்க வேண்டும். அவர் ஞபாகம் இல்லை என்று சொல்லும் போதே வா.சா1 தான் கையெழுத்து செய்துள்ளார் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. பிரதிவாதிகள் தரப்பில் 1ம்பிரதிவாதி பி.வா.சா.1 ஆக நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்து சாட்சியமளித்துள்ளார்.

(10) தாவா சொத்தின் மீது போடப்பட்ட வழக்குகள் பிரதிவாதிகளுக்கு ஆதரவாக தள்ளுபடி செய்யப்பட்டுள்ளன. பி.வா.சா.ஆ.1 முதல் 3 12 முதல் 15 வரையான ஆவணங்களாக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. பொதுவாக அளவுகள் என்பது அதனை கிரையம் பெற்ற நபர்களுக்கும் கொடுத்த நபர்களுக்கு உள்ள பிரச்சனை இங்கு பக்கத்து நிலத்துகாரர்களுக்கு ஆதரவாக வாதிகள் வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்று உறவுமுறை குறித்து கேட்கப்பட்டுள்ளது. வாதிகளுக்கு தாவா சொத்தில் பரிகாரம் கேட்க உரிமை உள்ளது என்பதை நீதிமன்றத்திற்கு நிரூபிக்க வேண்டும். தாவா சொத்து தங்களுக்கு பாத்தியமான களம் என்று வழக்கு தாக்கல் செய்துள்ளதாக வா.சா.1 கூறியுள்ளது போல் பரிகாரம் கேட்கப்படவில்லை. வாதிகளுக்கு இந்த வழக்கை தாக்கல் செய்ய அதிகாரம் உள்ளது என்பதற்கு ஆவணங்கள் தாக்கல் இல்லை. வாதிகள் உறவின்முறைக்கு தாவா சொத்தில் உரிமை உள்ளது என பரிகாரம் கேட்காத நிலையில், அளவுகள் சம்பந்தமாக அவர்கள் முன்னெடுக்கும் வாதம் ஏற்ககூடியதல்ல. மேலும் ஏற்கனவே தாவா சொத்து சம்பந்தமாக வழக்கு தாக்கல் செய்தவர்கள் வாதிகளின் உறவினர்கள் என்று தெரியவருகிறது. மேலும் வசந்தா என்பவர்

எழுதிக்கொடுத்த ஆணையர் அறிக்கை, பட்டா ஆகியவற்றை வாதிகள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளனர். ஆணையர் அறிக்கையில் கிழமேல் 135 அடி இருப்பதாக காண்பிக்கப்பட்டுள்ளது. வாதிகளுக்கு வழக்கு தாக்கல் செய்யவே அதிகாரம் இல்லாததால் அளவுகள் சம்பந்தமாக சொல்லியுள்ள சங்கதிகளைப் பொறுத்து கேட்க அருகதை இல்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

(11) தாவா சொத்தை களத்திற்கு மட்டும் தான் பயன்படுத்த வேண்டும், வேறு உபயோகத்திற்கு பயன்படுத்த கூடாது என நிபந்தனை எதுவும் அந்த தாவா சொத்தை கிரையம் பெற்ற கிரைய ஆவணத்தில் இல்லை என்பதை வா.சா.1 மற்றும் வா.சா.2 இருவருமே ஒப்புக்கொண்டுள்ளனர். உறவின்முறைகளின் மெஜாரிட்டி உறுப்பினர்கள் தீர்மானம் போட்டு அந்த தீர்மானத்தின் படி எந்த உபயோகத்திற்காக பயன்படுத்த வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டதோ அதற்காக பயன்படுத்தப்பட்டது என்று பிரதிவாதிகள் வா.சா.1–ஐ குறுக்கு விசாரணை செய்துள்ளனர். அளவுகள் தவறாக உள்ளது என பிராதில் சொல்லியுள்ள வாதிகள் அந்த ஆவணம் சம்பந்தமாக நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை. ஏற்கெனவே தாவா சொத்து சம்பந்தமாக நிறைய வழக்குகள் போடப்பட்டு முடிவுற்றும், நிலுவையிலும் இருந்து வருகிறது என்பது பிரதிவாதிகளின் எதிர்வழக்குரையை பார்க்கும் போது தெரியவருகிறது. வா.சா.1 சாட்சியத்தில் 1ம் வாதி வசந்தா என்பவரின் மாமனார் என்பதை ஒப்புக்கொண்டுள்ளார். உண்மையிலேயே வாதிகளின் உறவின்முறை இருந்திருக்கும் பட்சத்தில் பிரதிவாதிகள் மீது புகார் கொடுத்திருப்பார்கள் அல்லது உடனடியாக சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கும், அதுபோன்று எந்த நடவடிக்கையும் இல்லை என்பது தெரிகிறது. அளவுகள் சம்பந்தமாக வாதிகளுக்கு எந்த ஒரு தனிப்பட்ட விருப்பமும் எழ வேண்டியதில்லை. உரிமையில்லாத சொத்தில் அக்கறை காட்டுவதாகவும் இல்லை. தவறாக இருக்கும் பட்சத்தில் அது அதில் சம்பந்தப்பட்டவர்களின் பிரச்சனை தான் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

(12) தாவா சொத்து பிரதிவாதிகள் உறவின்முறைக்கு பாத்தியப்பட்டது. உறவின்முறை மூலம் முடிவெடுக்கப்பட்டு, கட்டிடம் கட்டுவதற்கு தீர்மானம் போடப்பட்டு, வரி வசூல் செய்யப்பட்டு தாவாச் சொத்தில் கட்டிடம் கட்டப்பட்டது என்பதற்கு பி.வா.சா.ஆ.6 8 முதல் 11 வரையிலான ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. தலைகட்டு வரி செலுத்தியவரின் பட்டியலில் 2ம் வாதி பெயர் உள்ளது. 1, 2 பிரதிவாதிகள் தனிப்பட்ட முறையில் அவர்களின் சுயநலத்திற்காக செயல்படுவதாக வாதிகள் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள். தனிப்பட்ட நபர்களாக காண்பிக்கவில்லை. உறவின்முறை பிரதிநிதிகளாக தான் வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள். வாதிகளின் பிரதிநிதித்துவ ஸ்தானத்தினை ஆட்சேபணை செய்துள்ள 5 முதல் 269 பிரதிவாதிகளும், பிரதிவாதிகளின் உறவின்முறையின் மெம்பர்கள் அவர்கள் ஆட்சேபணைதார்களாக சேர்க்கப்பட்டுள்ளனர். 1,2 5 முதல் 269 பிரதிவாதிகளும் மொத்தமாக எதிர்வாதம் செய்துள்ளனர். வாதிகளின் உறவின்முறை உள்ளது என்பதற்கான ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. அதே நேரம் பிரதிவாதிகள் உறவின்முறை செயல்பட்டு வருகிறது என்பதற்கான ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

(13) வாதிகள் சொல்லியுள்ள உறவின்முறையை பொறுத்து ஆட்சேபணை தெரிவிக்கப்பட்டுள்ள நிலையில், அதனை நிரூபிக்க மேற்படி உறவின்முறை உள்ளது என்பதற்கு ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை மேற்படி உறவின்முறையில் வழக்கு தாக்கல் செய்ய தீர்மானம் போடப்பட்டது என்பதற்கும் ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை. 24 மனை தெலுங்கு செட்டியார்கள் சமுதாய விவசாயம் செய்யும் மக்கள் 250 பேர் இருக்கின்றனர் என்பதற்கும், 250 பேர் விவசாயம் செய்து வருகிறார்கள் என்பதற்கும் ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை. தனிப்பட்ட நபர்கள் யாரும் பிரதிநிதிகள் ஸ்தானத்தில் வழக்கிடுவது சம்பந்தமாக விசாரிக்கப்படவில்லை 265 ஆட்சேபணைதாரர்கள் பிரதிவாதிகளாக சேர்க்கப்பட்டுள்ளனர்.

(14) வாதிகள் சொல்லியுள்ள விவசாய மக்களின் உறவின்முறை உள்து என்றும், இந்த வழக்கை தாக்கல் செய்வதற்கு வாதிகளுக்கு அதிகாரம் உள்ளது என்பதும், வாதிகள் தகுந்த சாட்சிய, சான்றாவணங்கள் மூலம் நிரூபிக்கவில்லை. ஆகவே, வாதிகள் பிரதிநிதிகள் ஸ்தானத்தில் தாக்கல் செய்துள்ள இந்த வழக்கு நிலைக்கதக்கதல்ல என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. எனவே, எழுவினா 3–ற்கு வாதிக்கு எதிராக இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

<u>எழுவினா 4–க்கு தீர்வு</u>:–

வாதிகள் தெலுங்கு செட்டியார் சமூக விவசாய மக்களின் பிரதிநிதிகள் ஸ்தானத்தில் தாக்கல் செய்துள்ள வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என தீர்வு காணப்பட்டுள்ள நிலையில், வாதிகள் கோரியுள்ள செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்று எழுவினா 4–ற்கு தீர்வு காண்கிறது.

<u>எழுவினா 5–க்கு தீர்வு</u>:–

தாவா சொத்தில் கட்டுமானங்கள் கட்ட 1,2 பிரதிவாதிகளுக்கு அனுமதி வழங்ககூடாது என்று, 3ம் பிரதிவாதி மீது நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கேட்கப்பட்டுள்ளது. தாவா சொத்தில் பிரதிவாதிகள் உறவின்முறையால் கட்டுமானம் கட்டப்பட்டுவிட்டது என்பதால் அதனை அப்புறப்படுத்த சொல்லி தான் செயல்உறுத்துக்கட்டளை பரிகாரமே கேட்டு பிராது சீர்திருத்தம் செய்யப்பட்டுள்ளது. எனவே, வாதிகள் கோரியுள்ள செயல்உறுத்துக்கட்டளை பரிகாரம் நீர்த்துபோய் விட்டது என்பது தெரியவருகிறது. ஆகவே, வாதிக்கு எதிராக எழுவினா 5–ற்கு இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

**<u>எழுவினா 6–க்கு தீர்வு</u>:–**

தாவா சொத்தில் கட்டப்படும், கட்டுமான பணிகளுக்கு தற்கால மின்இணைப்போ, நிரந்தர மின்இணைப்போ வழங்ககூடாது என்று 4ம் பிரதிவாதி மீது நிரந்தர உறுத்துகட்டளை பரிகாரம் கேட்கப்பட்டுள்ளது. தாவா சொத்தில் மின்இணைப்பு உள்ளது என்பதற்கு மின் கட்டண ரசீது தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மின் இணைப்பு வழங்கப்பட்டது என்பதை வா.சா.1 சாட்சியத்திலேயே சொல்லியுள்ளார். வாதிகளின் வழக்கு நிலைக்கதக்கதல்ல என்று எழுவினா 3–ற்கு தீர்வு காண்டுள்ளபடியால் எழுவினா 6–ற்கு வாதிக்கு எதிராக இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

**<u>எழுவினா 7–க்கு தீர்வு</u>:–**

இவ்வழக்கின் செலவுத்தொகையை தரப்பினர்கள் அவரவர்களே ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று எழுவினா 7–க்கு இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

**முடிவாக:–** வாதிகளின் வழக்கு செலவுத்தொகையின்றி தள்ளுபடி செய்யப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் செய்யப்பட்டு, என்னால் படித்துப்பார்க்கப்பட்டு, பிழைநீக்கம் செய்யப்பட்டு இன்று 2026ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 22ம் நாள் என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
அருப்புக்கோட்டை.

**<u>வாதிகள் தரப்பு சாட்சிகள்</u>** :-

| | | |
|---|---|---|
| வா.சா.1 | 07.07.2025 | சுந்தராஜ் |
| வா.சா.2 | 10.11.2025 | கனகராஜ் |

**<u>வாதிகள் தரப்பு சான்றாவணங்கள்</u>**:-

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.1 | 29.05.1948 | சுப்பம்மாள் கிரையம் பெற்ற கிரையப்பத்திரம் சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.2 | 06.07.1949 | கொப்புலு செட்டியார் மற்றும் நான்கு பேர்கள் கந்தன்செட்டியார் வகையறாவிடமிருந்து கிரையம் பெற்ற |

| | | |
|---|---|---|
| | | கிரையப்பத்திரம் சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.3 | 07.06.1949 | குருவம்மாளுக்கு சின்ன அய்யணன் வகையறா எழுதிக்கொடுத்த அடமானப்பத்திரம் சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.4 | 23.009.1952 | வெங்கிடசாமிநாயக்கருக்கு அய்யணன் செட்டியார் வகையறா எழுதிக்கொடுத்த கிரையப்பத்திரம் சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.5 | 21.07.1994 | குருசாமிக்கு சின்ன சோலையம்மாள் என்ற செல்லத்தாய் வகையறா எழுதிக்கொடுத்த கிரையப்பத்திரம் சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.6 | 20.01.2006 | 1ம் வாதி பெயரிலுள்ள பட்டா. பட்டா எண்.406 இணையதள நகல் |
| வா.சா.ஆ.7 | 20.01.2006 | சுந்தரராஜ் பெயரிலுள்ள பட்டா. பட்டா எண்.2652 இணையதள நகல் |
| வா.சா.ஆ.8 | 24.11.2015 | அசல் வழக்கு எண்.236/2015 வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட நீதிமன்ற ஆணையர் அறிக்கை மற்றும் வரைபடம் சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.9 | ---- | தாவா சொத்தின் நிலையை காட்டக்கூடிய புகைபடங்கள் எண்ணம் 26 குறுந்தகடுகள் |
| வா.சா.ஆ.10 | 11.03.2002 | வசந்தாவுக்கு குருசாமி எழுதிக்கொடுத்த கிரையப்பத்திரம் சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.11 | 26.06.2003 | வந்தா பெயரில் ஏற்பட்ட பட்டா மாறுதல் உத்தரவு சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.12 | ----- | கனகராஜ் ஆதார் அட்டை நகல் |

<u>பிரதிவாதிவகள் தரப்பு சாட்சி</u>

| | | |
|---|---|---|
| பி.வா.சா1 | 18.11.2025 | ராமசாமி |

<u>பிரதிவாதிகள் தரப்பு சான்றாவணங்கள்</u>:-

| | | |
|---|---|---|
| பி.வா.சா.ஆ.1 | 22.09.2015 | அருப்புக்கோட்டை மாவட்ட உரிமையியல் நீதிமன்ற அசல் வழக்கு எண்.254/2015 வழக்கின் பிராது சார்பு நகல் |
| பி.வா.சா.ஆ.2 | 12.10.2015 | அருப்புக்கோட்டை மாவட்ட உரிமையியல் நீதிமன்ற அசல் வழக்கு எண்.263/2015 வழக்கின் பிராது சார்பு நகல் |
| பி.வா.சா.ஆ.3 | 13.10.2015 | அருப்புக்கோட்டை மாவட்ட உரிமையியல் நீதிமன்ற |

| | | |
|---|---|---|
| | | அசல் வழக்கு எண்.264/2015 வழக்கின் பிராது சார்பு நகல் |
| பி.வா.சா.ஆ.4 | 18.04.2016 | பிரதிவாதி உறவின்முறை செலுத்தியுள்ள மின்கட்டண ரசீது அசல் |
| பி.வா.சா.ஆ.5 | 06.07.1949 | லிங்காபுரம் தெலுங்குசெட்டியார்கள் பொதுவிற்கு கந்தன் செட்டியார் வகையறா எழுதிக்கொடுத்த பதிவு கிரைப்பத்திரம் சார்பதிவக நகல் |
| பி.வா.சா.ஆ.6 | 28.06.2016 | தாவா சொத்தை காட்டக்கூடிய போட்டோக்கள் எண்ணம் 10 அசல் |
| பி.வா.சா.ஆ.7 | 28.06.2016 | போட்டோக்களுக்கு உரிய CD அசல் |
| பி.வா.சா.ஆ.8 | --- | 2010 ஆண்டுக்கு திருமண மண்டபத்திற்கு தலைகட்டுவரி செலுத்தியவர்களின் பட்டியல் அசல் |
| பி.வா.சா.ஆ.9 | --- | 2011 ஆண்டுக்கு திருமண மண்டபத்திற்கு தலைகட்டுவரி செலுத்தியவர்களின் பட்டியல் அசல் |
| பி.வா.சா.ஆ.10 | ---- | பிரதிவாதி உறவின்முறை வரவு, செலவு கணக்கு நோட்டு புத்தகம் 56, 57 அசல் |
| பி.வா.சா.ஆ.11 | ---- | பிரதிவாதி உறவின்முறை தீர்மான நோட்டு பக்கம் 28 அசல் |
| பி.வா.சா.ஆ.12 | 30.08.2024 | அருப்புக்கோட்டை கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் அசல் வழக்கு எண்.254/2015 வழக்கில் ஏற்படுத்தியுள்ள தீர்ப்பாணை சான்றிட்ட நகல் |
| பி.வா.சா.ஆ.13 | 30.08.2024 | அருப்புக்கோட்டை கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் அசல் வழக்கு எண்.254/2015 வழக்கில் ஏற்படுத்தியுள்ள தீர்ப்புரை சான்றிட்ட நகல் |
| பி.வா.சா.ஆ.14 | 23.07.2025 | அருப்புக்கோட்டை கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் அசல் வழக்கு எண்.264/2015 வழக்கில் ஏற்படுத்தியுள்ள தீர்ப்பாணை சான்றிட்ட நகல் |
| பி.வா.சா.ஆ.15 | 23.07.205 | அருப்புக்கோட்டை கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்ற அசல் வழக்கு எண்.264/2015 வழக்கில் ஏற்படுத்தியுள்ள தீர்ப்புரை சான்றிட்ட நகல் |

ANANTHAVALLI S Digitally signed by ANANTHAVALLI S

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
அருப்புக்கோட்டை.